சாட்சிய வாக்குமூலம்
(கு.வி.மு.ச.அத்தியாயம் 23)
முதல் கூடுதல் உதவி அமர்வு நீதிமன்றம், ஈரோடு மாவட்டம்
அமர்வு வழக்கு எண்.102/2017

2025ம் ஆண்டு டிசம்பர் மாதம் 08–ம் தேதி நாள் அரசு தரப்பு சாட்சியாக அ.த.சா.3–வது சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1968ம் ஆண்டு 54 வது சட்டத்தில் உள்ள 5(2) பிரிவின்படி ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது. எதிரிகள் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர் இல்லை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சிவராமன் | மாவட்டம் | : | |
| த/பெ.பெயர் | : | சண்முகசுந்தரம் | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| வட்டம் | : | | | | |

**முதல் விசாரணை:**

1. நான் தற்பொழுது கதவு எண்.39/1 பூசாரி தோட்டம் வீரப்பன்சத்திரம் ஈரோட்டில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனக்கு பெரியப்பா வேண்டும். அ.சா.2 எனக்கு பெரியம்மா வேண்டும். ஆஜர் எதிரிகள் அனைவரும் எங்களின் உறவினர்கள் எனவே அவர்களை எனக்கு தெரியும். என் பெரியப்பாவிற்கு இரு குழந்தைகள் அதில் எனக்கு மூத்த சகோதரியான கோமதி மற்றும் அருண்ராம் எனக்கு அண்ணன் ஆவார்.
2. 17.06.2014 அன்று இரவு சுமார் 11.15 மணி அளவில் எனது தந்தைக்கு அ.சா.1 ஆன எனது பெரியப்பா அலைபேசிமூலம் அழைத்தார். அலைபேசியில் என் தந்தை பேசிய பிறகு என்னிடம் அருண்ராம் தூக்குமாட்டி கொண்டார் என்று கூறினார். மேற்கண்ட சங்கதியை தெரிந்து கொண்டு உடனே நானும் என் தந்தை ஆகியோர் சிங்காவேல் அச்சகத்திற்கு சென்று அவரையும் அழைத்து கொண்டு பெரியப்பா வீட்டுக்கு சென்றோம்.
3. மேற்படி நான் பெரியப்பா வீட்டிற்கு சென்ற போது அங்கு என் பெரியப்பா மற்றும் பெரியம்மா அழுது கொண்டு இருந்தார்கள். அப்போது என்னவென்று கேட்டேன் அதற்கு என் பெரியப்பா மேலே சென்று பார் என்று கூறினார். மேலும் பெரியப்பா என்னிடம் அருண்ராம் தூக்கில் தொங்கி கொண்டு இருக்கிறார் என்று கூறினார். நான் உடனே மேலே சென்று உள்ள அறையில் இரு கதவுகள் கொண்ட தாழை

தட்டிப்பார்த்தேன் திறக்கவில்லை. நான் உடனே கால்களால் கதவை எட்டி உதைத்து திறந்தேன். அப்போது என்னுடைய அண்ணனான அருண்ராம் தூக்கில் தொங்கி கொண்டு இருந்தார்.

4. அதன்பிறகு நான் எனது தந்தை சிங்காரவேல் மற்றும் பெரியப்பா, பெரியம்மா ஆகியோர் அருண்ராம் அறைக்கு உள்ளே சென்றோம். அப்போது என் தந்தை மற்றும் சிங்காரவேல் அருண்ராமை உடலை தூக்கினார்கள். நான் கத்தியை எடுத்து கொண்டு வந்து என் அண்ணன் அருண்ராம் மின் விசிறியில் பாலிஸ்டர் வேஷ்டியில் தூக்கில் தொங்கி கொண்டு இருப்பதை பார்த்து கத்தியால் பாலிஸ்டர் வேஷ்டியை அறுத்தேன்.

5. தற்போது என்னிடம் காட்டப்படும் வேஷ்டி தான் நான் அறுத்த பாலிஸ்டர் வேஷ்டி ஆகும். அதன் பிறகு அருண்ராமை தூக்கில் இருந்து இறக்கி ஹலுக்கு கொண்டு வந்து படுக்க வைத்தோம். அதன் பிறகு அருண்ராம் உயிரை காபாற்றுவதற்காக ஆம்புலன்ஸ் மூலம் ஈரோடு அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு என் அண்ணனை மருத்து பரிசோதனை செய்த போது அவர் இறந்துவிட்டார் என்று மருத்துவர்களால் உறுதி செய்யப்பட்டது. அதன் பிறகு என் அண்ணன் பிரேதத்தை சவகிடங்கிற்கு அனுப்பிவைத்தார்கள்.

6. அதன்பிறகு நாங்கள் அனைவரும் வீட்டிற்கு வந்தோம். மறுநாள் காலை 6 மணிலிருந்து 6.15 மணிக்குள் ஈரோடு அரசு மருத்துவமனை சவகிடங்கில் உள்ள என் அண்ணன் அருண்ராமை காவல் ஆய்வாளரிடம் அடையாளம் காட்டினேன். மேலும் என் பெரியப்பாவிடமும் போலீஸ்சார் அடையாளம் காண்பிக்க சொல்லி கேட்டார்கள் என் பெரியப்பாவும் அடையாளம் காண்பித்தார். மேற்படி சங்கதிகளை போலீஸ்சார் வாக்குமூலமாக என்னிடம் பதிவு செய்து கொண்டார்கள். போலீஸ்சார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்களை அழைத்து அவர்கள் ஆஜர் ஆகவில்லை என்பதால் எனவே குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை என்ற காரணத்தினால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்படுகிறது